





# இயற்கையின் காதலன்!

"சிங்கிள் புல்லுக்கும் சூறாவளி மழைக்கும் தொடர்பு இருக்குது, தெரியுமுங்களா? பாஸ்..! மரத்துக்கும் இலைக்கும் முன்னாடி நாமெல்லாம் தூசு!" - இயற்கையின் கொ.ப.செ-வாகக் குரல் கொடுக்கிறார் யோகநாதன். சமீபத்தில் கிடைத்திருக்கும் விருது எக்ஸ்ட்ரா எனர்ஜியை ஏற்றியிருக்கிறது, இந்த இயற்கைக் காதலனின் குரலில்!

கோவையைச் சேர்ந்த யோகநாதன், ஓர் அரசுப் பேருந்து நடத்துநர். வேலை முடிந்ததும் மரக்கன்றும் பக்கெட் தண்ணீருமாகக் கிளம்பிவிடுவார் மனிதர். மரம் நடுவதில் அத்தனை வெறி! கடந்த 20 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 56,000 மரங்கள் வரை நட்டு இவர் செய்த பசுமை சாதனைக்காக 'எர்த் மேட்டர்ஸ் ஃபவுண்டேஷன்' என்ற அமைப்பு 'Eco Warrior' என்கிற விருதை வழங்கியிருக்கிறது. இந்த விருதைப் பெறும் முதல் தென்னிந்தியர் இவர். கடந்த 5-ம் தேதியன்று டெல்லியில் துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரியின் கையால் விருது பெற்று வந்திருக்கிறார் யோகநாதன்.

"சின்ன வயசுலேர்ந்தே மரம், செடி, மட்டைன்னா நமக்கு உசுருங்க. யாராச்சும் மரத்தை வெட்டினா அங்கேயே அவங்களை வெட்டிப் போடணும்போல இருக்கும். சமாதானமா சொல்லிப் பார்த்தேன், சண்டைகூடப் போட்டுப் பார்த்தேன். இவங்களை திருத்தவே முடியாதுன்னு புரிஞ்சுடுச்சு. சரி, இயற்கையைக் காப்பாத்தணும்கிற உணர்வை குழந்தைங்ககிட்ட இருந்து ஆரம்பிக்கலாம்னு முடிவு பண்ணி, ஸ்கூல் ஸ்கூலா ஏறி இறங்கிட்டு இருக்கேன். தாவரங்கள், மரங்கள், வன விலங்குகள், காடு போட்டோக்களை வெச்சு ஸ்கூல் குழந்தைங்களுக்கு ஸ்லைடு ஷோ நடத்துவேன். 'சின்ன புள்ளையான உனக்குத் தவிச்சா தண்ணி கொடுக்க அம்மா இருக்காங்க. ஆனா, அம்மாவோட தாகத்தைத் தீர்க்குறது மழைதானே! அப்ப அந்த மழை நம்ம அம்மா மாதிரி உசத்திதானே?'னு உருக்கமா பேசுவேன். 'லிப்ஸ்டிக், நெயில் பாலீஷ்ல க்ளோரோ ஃப்ளோரோ கார்பன் இருக்கு. அதைப் பயன்படுத்துறது மூலமா நாம ஓசோன் அடுக்குகளில் பாதிப்பு ஏற்படுத்தறோம். நாம அழகா இருக்கிற மாதிரி நம்ம பூமியும் அழகா இருக்கணும்ல?'னு கேட்பேன். இப்படிக் குழந்தைகளுக்குப் புரிகிற மாதிரி சொல்றதால அவங்களும் ஆர்வமாகி நான் சொன்னபடி நடக்க ஆரம்பிச்சிருக்காங்க.

நீலகிரி, கோவை, தஞ்சாவூர், திண்டுக்கல்னு பல மாவட்டங்களில் மரம் நட்டு வெச்சிருக்கேன். ஸ்கூல் குழந்தைகளையே மரம் நடச் சொல்லி, அந்த மரங்களுக்கு அந்தந்தக் குழந்தைகளோட பெயரையே வெச்சுடுவேன். ப்ரியா வேப்ப மரம், கதிர் தென்னை மரம், வித்யா புங்கை மரம்னு தமிழ்நாடு முழுக்க ஏகப்பட்ட மரங்கள் இருக்குது. குழந்தைகளும் சந்தோஷமாகி, தாங்கள் நட்ட மரக் கன்றுகளை அவ்வளவு கவனமா பார்த்துக்கிறாங்க.

மரங்கள் வெட்டுப்பட்டுக் கிடக்கிறதைப் பார்த்தா என்னால தாங்க முடியாது. கோவையில் ரோட்டை அகலப்படுத்துறதுக்காக ஏகப்பட்ட மரங்களை வெட்டிப் போட்டாங்க. அப்போ அந்த மரங்களுக்குக் கண்ணீரோடு மலர்வளையம் வெச்சேன். ஏதோ சத்தம் கேட்குதேனு நிமிர்ந்து பார்த்தேன். மரம் கீழே விழுந்ததுல, கூடு நொறுங்கிக் குஞ்சுகள் இறந்து கிடக்கிறதை வேதனையோட பார்த்தபடியே பறந்துட்டு இருந்துது தாய்க் குருவி. அதோட வாயில அந்தக் குஞ்சுகளுக்கான இரை! தாய்க் குருவிக்கு யார் ஆறுதல் சொல்றது?"

- கண்கள் பனிக்கப் பேசி முடிக்கிறார் யோகநாதன்.

- எஸ்.ஷக்தி

படம்: தி.விஜய்